ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2252/56 - 2021 නොවැම්බර් මස 06 වැනි සෙනසුරාදා - 2021.11.06

*2252/56 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

**சனாதிபதியின் பணிப்புரை**

1. வணக்கத்துக்குரிய கலகொடஅத்தே ஞானசார தேரர் அவர்கள்
2. பேராசிரியர் சாந்தி நந்தன விஜேசிங்க அவர்கள்
3. சிரேட்ட விரிவுரையாளர் வீரவர்த்தனலாகே சுமேத மஞ்ஜுல அவர்கள்
4. திரு.என்.ஜி.சுஜீவ பண்டிதரத்ன அவர்கள்
5. சட்டத்தரணி இரேஷ் செனெவிரத்ன அவர்கள்
6. சட்டத்தரணி டப்ளிவ்.பி.ஜே.எம்.ஆர்.சஞ்ஜய பண்டார மாரம்பே அவர்கள்
7. திரு.ஆர்.ஏ.எரந்த குமார நவரத்ன அவர்கள்
8. திரு.பாணி வேவல அவர்கள்
9. மௌலவி எம்.இசட்.ஏ.எஸ்.மொஹொமட் (பாரி) அவர்கள்
   தலைவர், உலமா சபை, காலி
10. திரு.கலீல் ரஹுமான் அவர்கள்
11. திரு.அப்துல் அஸீஸ் மொகமட் நிசார்தீன் அவர்கள்

ஆகியோருக்கு

வாழ்த்துக்கள்!

1A - G 35291 — 370 (2021/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசியலமைப்பின் 33வது உறுப்புரையினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி 2021.10.26 ஆந் திகதியைக்கொண்ட சனாதிபதியின் பணிப்புரையினால் தாபிக்கப்பட்ட ஒரே நாடு ஒரே சட்டம் என்பதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளதனாலும்,

இந்தச் செயலணியின் அங்கத்துவ அமைப்பு மற்றும் விடய நிர்ணயம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரிடமிருந்து கிடைத்துள்ள பிரதிநிதித்துவங்களையும் கருத்திற்கொண்டும்,

மேலும் இந்தச் செயலணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள விடய நிர்ணயத்தின்வண்ணம், இலங்கைச் சமூகத்தின் பல்லினத்தன்மை மற்றும் ஆண், பெண் என்ற சமூகத்தன்மை என்பவை செயலணி அங்கத்துவக் கட்டமைப்பினுள் எதிரொலிக்கவேண்டிய தேவையின்மீது கவனம்செலுத்தியும்,

மேலும், இச்செயலணியின் உறுப்பினரான பேராசிரியர் தயானந்த பண்டா அவர்களும் விரிவுரையாளர் மொஹொமட் இந்திகாப் அவர்களும் மேற்போந்த செயலணியின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளார்களாதலாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதியாகிய கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 வது உறுப்புரையினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்வண்ணம், கீழே குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களை, அவர்களின் விடயம்பற்றிய பிரயோகரீதியான அறிவு, உரிய துறையினுள் அடைந்துள்ள அதிகளவிலான அனுபவங்கள் மற்றும் பற்றுறுதி என்பவற்றைக் கருத்திற்கொண்டு மேற்போந்த சனாதிபதியின் பணிப்புரைக்கமையத் தாபிக்கப்பட்ட ஒரே நாடு ஒரே சட்டம் என்பதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

1. திரு.ராமலிங்கம் சக்கரவர்த்தி கருணாகரன் அவர்கள்
2. திருமதி.யோகேஸ்வரி பற்குணராஜா அவர்கள்
3. திரு.ஐயம்பிள்ளை தயானந்தராஜா அவர்கள்

மேலும், மேற்போந்த செயலணிக்கு அளிக்கப்பட்டுள்ள பணிகளைப் பின்வருமாறு திருத்துகின்றேன்.

1. இலங்கையினுள் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' எனும் கருத்துருவை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக பலதரப்புகள் கொண்டுள்ள கருத்துக்கள், அபிப்பிராயங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு சொல்லப்பட்ட கருத்துருவைக் கற்றாராய்ந்ததன்பின் அதற்காக இலங்கைக்குத் தனித்துவமான கருத்துருச் சட்டகமொன்றைத் தயாரித்தல் தொடர்பாக முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்.

இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.